# தலைப்பு: அப்பா ஒரு புத்தகம்!




## வழங்கியோர்

### அப்பா ஒரு புத்தகம்!

"தலைமறைவான அன்பிற்குள் தலைத்து நிற்கும் ஓர்
உன்னதமான உறவு - அப்பா..

தன் துன்பங்களை உள்வைத்து உன் புன்னகைக்கு
வித்தானவர் அவர் - அப்பா..

மகன்கள் முன்னே எல்லா நிலையிலும் எதிரியாக
தெரியும் ஓர் உண்மையான நாயகன் அவர்...

அம்மாவின் சுமை பத்துமாதம் என்றால் அப்பாவின்
சுமை ஆயுள் வரை...

அம்மாவின் அன்பை ஆயிரம் வழிகளில் உணரலாம்
ஆனால் அப்பாவின் ஓர் கையழுத்தம் உறைக்கும்
அத்தனையும்..

உன்னை எதிர்பார்த்து பெற்றெடுப்பாள் அம்மா
ஆனால் உன் எதிர்காலத்தையே பெற்றெடுப்பவர்தான்
அப்பா...

இனி ஒரு பிறவி இங்கே கிடைக்குமெனில் நீ எனக்கு
மகனாக நான் உனக்காக வாழ நினைக்கிறேன் -
அப்பா...

ஆயிரம் பக்க புத்தகத்தின் அனைத்து வரிகளுமே
சொல்லும் ஓர் அன்பின் வழிகாட்டி - அப்பா..."

**இரா. பாலமுருகன்**

### அப்பா ஒரு புத்தகம்!

சிறுவயதில் வேம்பின் கசப்பறிந்த எனக்கு
என் தந்தையின் அன்பறிய வயதில்லை..
நான் தவறு செய்தப் போதெல்லாம்
என்னை கண்டித்தக் கரங்களின் கருணை,
அன்று என் இதயத்திற்கு தெரியவில்லை...
என் வெற்றிக்காக நீங்கள் சென்ற
கரடுமுரடான பாதைகள்,
அன்று என் கண்களுக்கு தெரியவில்லை...

பெரியவர்களின் நற்சொற்களைக்
கேட்க அழைத்து சென்றப் போதெல்லாம்,
அன்று என் செவிகளுக்கு கேட்கவில்லை...
நான் வெற்றி பெற்றப் போதெல்லாம் தலைக்கனம்
மட்டும் கொள்ளாதே! என்றப் போதெல்லாம்,
அன்று என் அறிவிற்கு எட்டவில்லை...

"தந்தை சொல்மிக்க மந்திரமில்லை என்பார்கள்"
ஆகையால் என்னவோ அன்றும் இன்றும்
உங்கள் சொல்லடி நடக்கிறேன்...
ஆனால் நீங்கள் எனக்காக வழிநடத்திய
இப்புத்தகத்தின் பயனரியாது மேலோட்டமாகப்
பார்த்தேன் அன்று.

இன்று அப்புத்தகத்தின் பயனை அடைந்து என்
பிள்ளைக்கு நான் வழி நடத்தும்போது தான்
தெரிகிறது,
நீங்கள் என் புத்தகம் மட்டும் அல்ல
என் பொக்கிஷம் என்று...

**ச. குமரவேல்**

### அப்பா ஒரு புத்தகம்!

சாகும்போது கொடுவாளை
மட்டும் வைத்துவிட்டு செத்தார்
உன் தாத்தா என்று கூறினாய்

காட்டில் மரம்
உழவுக்கு வண்டித் தழையென
நீ - வெம்பாடு பட்டதில் உருவானது
இந்த ஐந்து ஏக்கர் சொச்ச நிலம்
இரண்டு கிணறு எல்லாமும்

பிறந்த வீட்டில் சுகப்படாது
கால் முட்டி தேய, தேய மலையேறி
உனக்கு ஒத்தாசையாகயிருந்து
நான்கு பிள்ளைகளைப் பெற்ற அம்மாவுக்கும்
கூத்தியாள் வைத்திருந்ததைத் தவிர
வேறு எந்த குறையும் வைக்காமல்
பிறருக்கு மதிப்பாய்
குடும்பம் நடத்தினாய்

முதன் முதலா வீட்டுக்கு
மின்சார விளக்கு போட்டது தொடங்கி
'ஊரிலிருந்த பொம்பளைங்க எல்லாம்
உரல்ல மாவு ஆட்டி கஷ்டப்பட்டப்போ
கிரைண்டர் வாங்கி கொடுத்தவர் என்று'
பேசி, பேசி பெருமைப்பட்டு கொண்டவள் அம்மா

பெற்ற பிள்ளைகளை விடவும்
மாடு, கன்றுகளின் மேல்
பாசம் வைத்து வாழ்கிறாய்
இருக்கும்
அத்தனையும்
அவைகளால் வந்தன

நீ ஆயிரம்
கடன்பட்டபோதும் மனம் தளராமல்
பீடியைப் புகைத்தே
உறங்கி எழுவாய்

வரப்புமீது நின்று நீ
விதை நெல் வீசினால்கூட
நாற்றங்கால் சேற்றில்
பூ தூதுவதைப் போல்தான் இருக்கும்

அண்டை கழித்து;
ஒட்டுத்தாள் வைத்து
வரப்பு ஏறி நடந்தால்
வாகை மரங்கள் அசைவது போலிருக்கும் உனது

மேழி பிடித்து ஏர் உழுதால்
எந்த காய்ச்சலுக்கும்
சேடை வற்றாது.
நீர் இருக்கும்

எந்த பள்ளியும்
ஏறியதில்லை
பெயரைக் கூட
ஏர் உழுவது போலத்தான் எழுதுவாய்

நிலத்தை;
மாடுகளை;
மனிதர்களை நன்றாகப்
படித்திருக்கிறாய்

ரேங்காட்டில்
உன்னுடைய கையெழுத்தைப் பார்த்து
உடன் படிக்கும் பெண்கள் கேளிபேசுவார்களோ
என்றெண்ணி
பல நேரங்களில்
நானே போட்டிருக்கிறேன்
'என்னைப் போல
மண்ணைப் பிசைந்து நீங்க
வாழாதீங்க' என்று
நாளு புள்ளைக்கும் அறிவுரை சொன்னாய்

எவனும் கேட்கல
கேட்டுப் படித்தவன் நான்

நீங்கள் படிக்க வைத்த;
நானாய் விரும்பி படித்த
இந்த பாழாய்ப்போன படிப்புதான்
உங்களிடமிருந்து
என்னைப் பிரித்து
எதோ ஒரு கடையேறி
எங்கோ ஒரு தேசத்தில்
யாரோ ஒருவர் விளைவித்த
அரசியை வாங்கி பொங்கித் தின்று காலம் கழிக்க
வைக்கிறது என்பதை
அறிவாயா?
என் தகப்பனானவனே நீ –

**முனைவர் அ. அமுல்ராஜ்**
**உதவிப் பேராசிரியர்**
**தமிழ்த்துறை**
**ஸ்ரீ சங்கரா பல்கலைக் கழகம், காஞ்சிபுரம்**

**அப்பா ஒரு புத்தகம்!**

என்னுள் பின்னிய வலைகள்
ஏக்கத்தில் புகுந்த அலைகள்
கண்ணுள் கண்ணீராய் வடியும்
காலத்தின் சோகச் சிலைகள்

மண்ணுள் புதைந்த அப்பா
மனதுள் நிறைந்த வலிகள்
விண்ணில் சென்று மறைந்தாலும்
விலகாது உங்கள் பந்தம்

ஆணிவேராய் கால் பதிக்க
அகிலத்தில் உருவம் தந்தாய்
தோணி போல எனக்கிருந்து
துடுப்பாக காத்து வந்தாய்

ஒருவயதில் உன் பிரிவு
ஓராயிரம் வலிகள் அப்பா
உருவமது இல்லை இன்று
அருவமாக வந்தாய் அப்பா

கைபிடித்து உரம் தந்து
கதைபேசி வாழவைத்த தெய்வமப்பா
வைகறைப் பொழுது வந்தால்
வாரி அணைத்துச் செல்வீர்

கள்ளமில்லா உன் சிரிப்பு
கனவுகளில் தோன்றி வரும்
வெள்ள மனம் கொண்டவரே
விழித்திருந்து தூங்க வைப்பீர்

துடிப்புகள் தவிப்புகள் தாவிவர
துயரங்கள் கண்களில் கண்ணீராகும்
அப்பாவெனும் நூல் எழுத
ஆயிரம் பிறப்பெடுதாலும் என் எழுதுகோல்
போதாது.

**சரளா விமலராஜா**
**சுவீஸ்**

**அப்பா ஒரு புத்தகம்!**

சமூகப் போராட்ட உணர்வை கற்றுத்தரும்
பொழுது
அப்பா ஒரு புரட்சி புத்தகம் !
அறத்தை அறிய வைத்த பொழுது அவர் ஒரு
நீதி நெறி புத்தகம் !
வீரத்தை விதைத்த பொழுது
அவர் ஒரு போராளி புத்தகம் !
வழித்துணையாக வரும்போது
அவர் ஒரு வழிகாட்டி புத்தகம் !
தரணியை அவரைப் போற்றும் போது அவர்
ஒரு தங்க புத்தகம் !

உலகத்தை உற்றுநோக்கி கொள்ள அவர் ஒரு
பூலோக வரைபட புத்தகம் !
கண்டிப்பை வெளிப்படுத்தும்போது அவர் ஒரு
சட்ட புத்தகம் !
ஐயங்களைப் போகும்பொழுது
அவர் ஒரு அகராதி !
தேன் தமிழை பேசும் பொழுது
அவர் ஒரு மறத்தமிழன்!
தன்னுயிர் தந்து
என் உயிர் காக்கும் போது
அவர் ஒரு காவலாளி !
தினமும் நான் கண் விழித்து
பார்த்து ரசித்து படிக்கும் அவர் ஒரு அரிய
புத்தகம் !

**- சபீதா பானு,**
**காரைக்குடி**